அ.வ.எண் : 05/2019 நாள்: 28.08.2024

வா.சா.1 – திருமதி. முத்துலெட்சுமி

**<u>2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

1. இந்த வழக்கில் எல்லா சொத்துக்களையும் சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். சர்வே எண்.261/6பி1 ல் 50 செண்ட் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு 61 செண்ட் எனது அப்பா எனக்கு எழுதிக் கொடுத்தார். 10 செண்ட்க்கு 2ம் பிரதிவாதி பட்டா மாற்றிக் கொண்டார். சர்வே எண்.261/6பி1 கண்ட சொத்தை பிரதிவாதிகள் எனக்கு பிரதிவாதிகள் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2. தாவா சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் இருப்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் சம்பந்தமாக எனது தந்தை உயில் எதாவது எழுதி வைத்துள்ளாரா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் முழுவதும் எனது தந்தை கோவிந்த கோனாருக்கு ஏற்கனவே பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து எனது தந்தைக்கு தனித்த பாத்தியப்பட்டது என்ற வகையில் சர்வே எண்.261/6பி1 கண்ட சொத்தை எனக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

3. தாவா சொத்தை பிரதிவாதிகளுக்கு எனது அப்பா எழுதிக் கொடுக்க உரிமை உண்டு என்றால் சரிதான். தாவா சொத்தை எனக்கு எனது அப்பா எழுதி கொடுக்கும்போது பிரதிவாதிகள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எங்கள் ஊரில் எங்கள் சமூகத்தில் உள்நாட்டு

கிரையப்பத்திரம் எழுதிக் கொள்ளும் வழக்கம் உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்தது பற்றி ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் ஆட்சேபனை உள்ளது என பங்கை பிரித்துக் கொடுத்து விட்டு அவர்களுக்கு கொடுப்பதற்கு ஆட்சேபனை இல்லை.

4. தாவா சொத்துக்களை எனது தகப்பனார் பிரதிவாதிகளுக்கு பதிவு செய்யப்படாத ஆவணம் மூலம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை எனது தகப்பனார் பிரதிவாதிகளான எனது சகோதரர்களுக்கு பதிவு செய்யப்படாத பத்திரம் மூலம் எழுதிக் கொடுத்துள்ளார் என்ற விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றும் நான் 1ம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. எனது ஊரைச் சேர்ந்த சு.ப.தங்கச்சாமியை தெரியும் என்றால் தெரியும். மேற்படி சு.ப.தங்கச்சாமி பிரதிவாதிகளுக்கு எனது தந்தை எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்படாத பத்திரத்தில் கையெழுத்து செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 18.02.1999ம் தேதியிலேயே பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்பட்டது எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. எனது பிள்ளைகளுக்கு விசேஷ காலங்களில் நல்ல முறையில் சீர் செய்யவில்லை என்ற காரணத்தினால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. பிரதிவாதிகளுக்கு பதிவு செய்யப்படாத பத்திரம் மூலம் தாவா சொத்தை பாகப்பிரிவினை செய்து எனது அப்பா கொடுத்து விட்டதால் தாவா சொத்தில் எனக்கு எந்த பங்கும் இல்லை என்றால் சரியல்ல. நான்

வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

//ஒப்பம்//

மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
தேவகோட்டை.